SPC

# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

## பதவி வெற்றிடங்கள்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே நிறுவனமாகும். மேலும் இலங்கையில் தனியார் துறைக்கான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும்.

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### முகாமைத்துவ உதவியாளர் (மருந்தாளர்) (MA 2.1) - தரம் III ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் - 30 வெற்றிடங்கள்

### MANAGEMENT ASSISTANT (PHARMACIST)

**தகைமைகள்:**

(அ) N.V.Q. 5ஆம் நிலைக்குக் குறையாத, இலங்கை மருத்துவ பேரவையினால் மருந்தாளராக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அத்துடன் பதிவு செய்யப்பட்ட அரச மருந்தகம் / கூட்டுத்தாபனம் / சபை / கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் மருந்து வழங்குவதில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 01 வருடகால அனுபவம்.

மற்றும்

(ஆ) கணனி அறிவு

**சம்பள அளவு** : அனைத்தும் அடங்கலாக ரூபா 96,500/-

**வயதெல்லை** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**விளிம்பு நன்மைகள்:**

விண்ணப்பங்களை வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதைய பதவி நிலை, சம்பள நிலை மற்றும் அளவு முன்னர் வகித்த பதவி, முன்னைய வேலை வழங்குநருடன் இணைந்த மற்றும் விலகிய திகதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, சகல சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை உள்ளடக்கிய முழு சுய விபரத்துடன் உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் பெயர் மற்றும் முகவரிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும்.

**தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.**

அரச துறை அமைப்புகளில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனங்களின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் 2025-09-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பதில் பிரதிப் பொது முகாமையாளர்- மனிதவளம் மற்றும் நிர்வாகம்,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**"மெஹெவர பியச" 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**
**தொலைபேசி: 011 2320356-9**